செ.வெ.எண்.74 நாள்.31.03.2017.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றுவது குறித்த விழிப்புணர்வு கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றுவது குறித்த விழிப்புணர்வு கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.03.2017) நடைபெற்றது. கூட்டத்தில், பல்கலைக் கழக துணை வேந்தர் முனைவர் ஆர்.பாஸ்கர், பதிவாளர் திரு.ஜான் டிபிரிட்டோ, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மூலம் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணையர்கள் திரு. D. ஸ்ரீனிவாசக ராகவன், திரு. I. பினாய் காஷ் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினர்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

சீமை கருவேல மரங்கள் வேளாண் நிலங்களையும், பிற வாழ்வாதாரங்களையும் நாசப்படுத்தக் கூடிய ஒரு கொடிய தாவரமாகும். இதனால் ஏற்படும் தீமைகள் அதிகமாக இருப்பதால், இதனை முற்றிலுமாக அகற்றிட முனைப்புடன் செயல்பட வேண்டும். விவசாயிகள் தங்களது நிலத்தில் விவசாயம் செய்யாமல் கைவிடப்படுவதாலும், மழை இல்லாத காரணங்களால் விவசாயம் செய்யாமல் இருப்பதாலும், லாபகரமின்மையால் விவசாயம் செய்யாமல் இருப்பதாலும் மற்றும் இளம் சந்ததியினர் விவசாயத்தில் ஈடுபடாமல் இருத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாய நிலங்களில் சீமை கருவேல மரங்கள் வளர்கின்றன. முளையிலேயே கிள்ளினால் முள்மரங்களை ஒழிப்பது சுலபமாகும். விவசாயிகள் விவசாய நிலங்களை தரிசாக போடாமல் உழுது செம்மைப் படுத்தி வைக்க வேண்டுமென்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்திட வேண்டும். சீமை கருவேல மரங்களை ஒழித்திட மாணவர்களையும் விழிப்புணர்வு ஏற்படுத்திட இக்கூட்டம் நடத்தப்படுகிறது. சமுதாய விழிப்புணர்வுக்கு வெளிச்சத்தை வழங்குபவர்கள் மாணவ, மாணவியர்கள். சீமை கருவேல மரங்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். நாம், எதை எதற்காக செய்கிறோம் என்பதற்கு நாம் விழிப்புணர்வு பெற வேண்டும். நம் வருங்கால சந்ததியினருக்கு தீமை விளைவிக்கக் கூடிய விஷச்செடியை அகற்றிட வேண்டும். இப்பணியில் அரசு மட்டும் ஈடுபடுவது போதாது, அனைத்து தரப்பு மக்களும் ஈடுபடும் வகையில் மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். சிறப்பாக விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் சீமை கருவேல மரங்கள் இல்லை என்ற நிலையினை ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு) திரு.தண்டபாணி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் ரவிச்சந்திரன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.பாலமுருகன் மற்றும் அலுவலர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவ, மாணவியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.